செய்தி மாலை

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம்

மடல்-66 ஜூன், 2026

வங்கி ஊழியர்களின் வாழ்வில் ஓய்வூதியம் எனும் ஒப்பற்ற பாதுகாப்பினை பெற்றுத் தந்த அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் தன்னிகரில்லா தலைவர்

தோழர் தாரகேஷ்வர் சக்ரபர்த்தி

பிறந்தநாள் நூற்றாண்டில் அவர்தம் தியாக வரலாற்றினை நினைவு கூர்வோம்

தோழர் தாரகேஷ்வர் சக்ரபர்த்தி அவர்கள் ஜூன் 2,1926 அன்று தற்போது பங்களாதேஷில் உள்ள நவகாளி மாவட்டத்தில் உள்ள ஒரு சிறிய நகரமான லட்சுமிபுரத்தில் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை தனது கிராமத்தில் பயின்ற தோழர் தாரக் அவர்கள், உயர் கல்விக்காக கொல்கத்தாவுக்கு இடம் பெயர்ந்தார்.

1945 ஆம் ஆண்டில் அசுதோஷ் கல்லூரியில் பி. ஏ. பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்ற தோழர் தாரக் அவர்கள், கல்லூரியில் தனது வாழ்க்கையின் இந்த தருணத்தில்தான் மாணவர் சமூகநல சங்கத்தின் செயலாளராக பொறுப்பேற்று தனது சமூகப் பணியைத் தொடங்கினார்.



அப்போது நிலவிய வங்காள பஞ்சத்தின் போது, ஏழை மக்களிடையே பணியாற்றியது, அவருக்கு வாழ்க்கையைப் பற்றிய சரியான கண்ணோட்டத்தை அளித்தது. அவரது பெற்றோரின் வசதியற்ற நிலை காரணமாக, அவர் தனது எம்.ஏ பட்டப்படிப்பை தொடராது, ஜனவரி 1,1946 அன்று சென்ட்ரல் பாங்க் ஆ◌ஃப் இந்தியாவில் பணியில் சேர்ந்தார்.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் துவக்கப்பட்ட அதே காலகட்டத்தில், ஜூலை 1946 இல், கொல்கத்தாவில் சென்ட்ரல் வங்கி ஊழியர் சங்கம் துவங்கப்பட்டபோது, அத்தொழிற்சங்கத்தில் உறுப்பினராக தன்னை இணைத்துக் கொண்டார். ஜனவரி 1947 இல், மேற்கு வங்க மாநில சென்ட்ரல் வங்கி ஊழியர் சங்கத்தின் உதவிச் செயலாளராக தேர்வானதன் மூலம் தொழிற்சங்க இயக்கத்தில் தனது பயணத்தைத் தோழர் தாரக் அவர்கள் தொடங்கினார்.

1956ம் ஆண்டில் தோழர் தாரக் அவர்கள் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் மத்தியக் குழு உறுப்பினராகவும், 1960 இல் அதன் உதவிச் செயலாளராகவும், 1976 இல் அதன் செயலாளராகவும் பொறுப்பேற்றுக் கொண்டார். 1980ம் ஆண்டில் அலகாபாத்தில் நடைபெற்ற அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் மாநாட்டில் AIBEA இன் பொதுச்செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது முதல், தன்னுடைய வாழ்நாள் முழுவதும் அப்பொறுப்பில் பணியாற்றி, வங்கி ஊழியர் இயக்கத்திற்காக தன்னை அர்ப்பணித்தார் தோழர் தாரக் அவர்கள்.

சென்ட்ரல் வங்கி ஊழியர்களின் தொழிற்சங்க இயக்கத்தின் முக்கிய தளகர்த்தராக இருந்த தோழர் தாரக் அவர்கள், 1956ம் ஆண்டு அகில இந்திய சென்ட்ரல் வங்கி ஊழியர் சம்மேளனம் நிறுவப்பட்டபோது அதன் அகில இந்தியப் பொருளாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார். 1957 முதல் 1993 வரை, அகில இந்திய சென்ட்ரல் வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளராகவும், 1993 இல் அதன் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, இறுதி வரை அந்தப் பதவியை வகித்தார். சென்ட்ரல் வங்கியில் ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளின் மிகவும் வலுவான ஒன்றுபட்ட தொழிற்சங்க இயக்கத்தை அவர் கட்டியெழுப்பினார்.



இந்தியாவிலும், உலகெங்கிலும் செயல்பட்டுவந்த தொழிற்சங்க இயக்கங்களுடன் கொண்டிருந்த தொடர்பினால், தோழர் தாரக் அவர்கள் உலகின் பல பகுதிகளுக்குச் சென்று பல்வேறு சர்வதேச தொழிற்சங்க மாநாடுகளில் பங்கேற்றார். தோழர் தாரக் அவர்கள் உலகத் தொழிற்சங்க அமைப்பின் (WFTU) துணைத் தலைவராகவும், TUI இன் வங்கி ஊழியர்களின் தொழிற்சங்கப் பிரிவின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். தோழர் தாரக் அவர்கள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய கவுன்சில் உறுப்பினராகவும் செயல்பட்டார்.

தோழர் தாரக் அவர்கள் 1951ம் ஆண்டு சாஸ்திரி தீர்ப்பாயம் (SASTRY TRIBUNAL) முதற்கொண்டு வங்கித் துறையில் அமைக்கப்பட்ட பல்வேறு தீர்ப்பாயங்கள் முன்பு வங்கி ஊழியர்களின் உரிமைகள் குறித்த வழக்குகளில் திறம்பட வாதாடினார்.

மேலும், 1966ம் ஆண்டு அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் வென்றெடுத்த முதல் இருதரப்பு ஒப்பந்தம் முதல், தன் ஆயுட்காலம் வரையில் தொடர்ந்து அனைத்து இருதரப்பு ஒப்பந்தங்களிலும் கையெழுத்திட்ட பெருமைக்கு உரியவர் தோழர் தாரகேஷ்வர் ஆவார்.

தோழர் பிரபாத்கர் மறைவிற்குப் பின்னர் 5வது, 6வது மற்றும் 7வது இருதரப்பு ஒப்பந்தங்களை வெற்றிகரமாக பெற்றுத் தந்தவர் தோழர் தாரக் அவர்கள் ஆவார். வங்கி ஊழியர்களின் வாழ்க்கை நிலையில் முத்தாய்ப்பாக, 1993ம் ஆண்டு, கடுமையான தாக்குதல்களையெல்லாம் தகர்த்தெறிந்து வங்கி ஊழியர்களுக்கு ஓய்வூதிய ஒப்பந்தத்தினை பெற்றுத் தந்தமைக்காக தோழர் தாரக் அவர்கள் என்றென்றும் வங்கி ஊழியர்களால் நினைவுகூரப்படுகின்றார்.

தோழர் தாரக் அவர்கள் வங்கிகள் தேசியமயம் கோரி, அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் மேற்கொண்ட கடுமையான போராட்டங்களின் தளகர்த்தராக இருந்ததுடன், அரசின் வங்கி தனியார் மயமாக்கல் முயற்சிகளை எதிர்த்துப் போராடுவதில் மிக முக்கியமான பங்கைக் கொண்டிருந்தார்.

வங்கிகளை தனியார்மயமாக்கும் அரசாங்கத்தின் தவறான நடவடிக்கைகளுக்கு எதிராக கடுமையான எதிர்ப்பைக் கட்டியெழுப்புவதில் தோழர் தாரக் அவர்களின் தீவிரமான முன்னோடி முயற்சிகளை வங்கி ஊழியர்கள் எப்போதும் நினைவில் கொள்வார்கள்.

வங்கிக் கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்களின் பட்டியலை வெளியிட்டதில் அவரது துணிச்சலான முன்முயற்சி, தேசிய வளர்ச்சி மற்றும் அதில் வங்கித் துறையின் பங்களிப்பின் மீது அவர் கொண்டிருந்த உறுதிப்பாடு அவருடைய தேசபக்தியின் பிரதிபலிப்பாகும்.

வங்கி ஊழியர் மற்றும் அதிகாரிகளின் உரிமைகளைப் பாதுகாக்க வலுவான ஒன்றுபட்ட அமைப்பு தேவை என்றுணர்ந்த தோழர் தாரக் அவர்கள், வங்கித் துறையில் நூறு சதவீதப் பணியாளர்கள் மற்றும் அதிகாரிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பாக - வங்கிச் சங்கங்களின் கூட்டமைப்பினை (**UFBU**) உருவாக்கினார். ஒருங்கிணைந்த வங்கிச் சங்கங்களின் இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வதில் அவரது தொலைநோக்குப் புரிதல் இன்றளவும் அனைவராலும் பாராட்டப்படுகின்றது.



அதேபோன்று, பெண் ஊழியர்களும் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஒருங்கிணைக்கப்பட வேண்டும் என்பதை உணர்ந்து தோழர் தாரக் அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளின் காரணமாக, அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் மத்தியக் குழு மற்றும் நிர்வாகக் குழு உட்பட பல்வேறு நிலைகளில் பெண் தொழிற்சங்க ஊழியர்கள் பிரதிநிதித்துவம் பெறும் நிலை ஏற்பட்டுள்ளது.

தொழிற்சங்கங்கள், தொழிற்சங்க உரிமைகள் மற்றும் ஊழியர்களின் வேலைப் பாதுகாப்பு ஆகியவற்றின் மீதான அரசின் தாக்குதல்கள் அதிகரித்துவரும் சூழலில், தொழிற்சங்கங்கள் பொருளாதாரக் கோரிக்கைகளுக்காக மட்டும் முன்னுரிமை அளித்து போராடும் நிலைமையிலிருந்து மாறி, தொழிலாளர் மீதான அடிப்படைத் தாக்குதல்களை எதிர்த்தும் போராட வேண்டும் என்ற அணுகுமுறையினை உருவாக்கியவர் தோழர் தாரக் அவர்கள் ஆவார்.

"வங்கிகள் தேசியமயத்தினை பாதுகாக்கவும் - ஊழியர்களைப் பிரித்தாளும் முயற்சிகளை முறியடிக்கவும்" (**DEFEND NATIONALISATION - DEFEAT DE-UNIONISATION**) நம் உறுப்பினர்கள் சூளுரை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி, அவர் நாடெங்கிலும் மேற்கொண்ட ஆற்றல் மிக்க சொற்பொழிவுகள், போராட்டங்கள் ஆகியவை வங்கி ஊழியர்களின் போராட்டக் களத்தில் பெரும் உத்வேகத்தை ஏற்படுத்தியது.

1987 இல் தோழர் தாரக் அவர்களுக்கு மாரடைப்பு ஏற்பட்டு, **1989** இல் இதய அறுவை சிகிச்சை செய்திருந்த நிலையில், அவரது தொழிற்சங்க செயல்பாடுகளைக் கட்டுப்படுத்துமாறு மருத்துவர் அறிவுறுத்திய போதிலும், அவர் தனது தொழிற்சங்கப் பணிகளை எப்போதும்போல் அர்ப்பணிப்புடன் தொடர்ந்தார்.

2003, மே மாதம் 2ம் நாளன்று தோழர் தாரகேஷ்வர் சக்ரவர்த்தி அவர்கள், தொழிற்சங்க அலுவல் காரணமாக மும்பை சென்று திரும்பும் போது கொல்கத்தா விமான நிலையம் அடைந்த தருணத்தில் தன் இன்னுயிர் நீத்தார்.

வலிமைமிக்க அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தினை நிறுவிக் கட்டமைத்த அன்றைய வங்கி ஊழியர்களின் தலைமுறைக்கும், தற்போதைய தலைமுறை வங்கி ஊழியர்களுக்கும் இடையிலான கடைசி தொடர்பாளராக தோழர் தாரக் இன்றளவும் திகழ்கின்றார் என்றால் அது மிகையன்று.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் மீதான நம் அனைவரின் சீரிய அர்ப்பணிப்பு ஒன்றே அத்தகைய சிறந்த தலைவருக்கு உரித்தான அஞ்சலியாக இருக்கும். தோழர் தாரக் அவர்களின் பிறந்த நாள் நூற்றாண்டில், அவர்தம் வழியொற்றி, வலுவான ஒற்றுமையினையும், வலிமையான சங்கத்தினையும் கட்டமைத்துப் பேணிட நாமனைவரும் உறுதி ஏற்போம்.

தோழர் தாரகேஷ்வர் சக்கரவர்த்தி நூற்றாண்டு சிறப்புக் கூட்டம் - சென்னை - 02-06-2026

தோழர் தாரகேஷ்வர் சக்கரவர்த்தி அவர்களின் நூற்றாண்டு நிறைவினை நினைவு கூறும் வகையில் சிறப்புக் கூட்டத்தினை, தோழர் தாரக் அவர்களின் 101 வது பிறந்த தினமான 02-06-2026 அன்று சென்னை A K நாயக் பவனில் மாலை 5-30 மணிக்கு தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் ஏற்பாடு செய்துள்ளது.




இக்கூட்டத்தில் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் C H வெங்கடாசலம், தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் E அருணாச்சலம் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

கோவை மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் சார்பில் 02-06-2026 அன்று மாலை 5-30 மணியளவில் கோவை மாவட்ட வங்கி ஊழியர் சங்க அரங்கில் நடைபெறும் சிறப்புக் கூட்டத்தில் சம்மேளனத்தின் தலைவர் தோழர் A சிதம்பரம், இணைச் செயலாளர் தோழர் E நாகேந்திரன் மற்றும் தோழர் S சிவசாமி, AITUC ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்கின்றனர். இக்கூட்டங்களில் நம் உறுப்பினர்கள் பெருவாரியாகக் கலந்துகொள்ள வேண்டும் என்று தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் கேட்டுக் கொள்கின்றது.

சேலம் மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் 65ம் ஆண்டு நிறைவு விழா

சேலம் மாவட்ட வங்கி ஊழியர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு 65 ஆண்டு நிறைவு பெற்றதைக் குறிக்கும் விழா சேலம் நகரில் அமைந்துள்ள மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் கூட்ட அரங்கில் 16-05-2026 அன்று சிறப்புற நடைபெற்றது.



1961-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட சேலம் மாவட்ட வங்கி ஊழியர் சங்கம், சேலம் மாவட்டத்தில் பணியாற்றும் வங்கி ஊழியர்களின் நலனுக்காக கடந்த அறுபத்தைந்து ஆண்டு காலமாக சிறந்த முறையில் செயல்பட்டு வரும் பெருமைமிகு சங்கமாகும்.


அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் மற்றும் தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் அனைத்து அறைகூவல்களையும் முழுமையாகச் செயல்படுத்தி வரும் முன்னோடிச் சங்கமாக சேலம் மாவட்ட வங்கி ஊழியர் சங்கம் திகழ்கிறது.



சேலம் மாவட்ட வங்கி ஊழியர் சங்கம் துவங்கி அறுபத்தைந்து ஆண்டுகள் நிறைவடைந்ததை குறிக்கும் வகையில் **16-05-2026** அன்று சேலம் நகரில், அரசு சிறப்பு மருத்துவ மனையில் சேலம் மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் முயற்சியினால் இரத்த தானமுகாம் ஏற்பாடு செய்யப்பட்டது. இம் முகாமில் ஏராளமான நம் சங்க உறுப்பினர்கள் ஆர்வத்துடன் பங்கேற்று இரத்த தானம் அளித்தனர்.

புதுப்பிக்கப்பட்ட சங்க அலுவலகக் கட்டிடத் திறப்பு விழா

சேலம் மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் சொந்த அலுவலகமான 'தொழிலாளர் இல்லம்' **1971-**ஆம் ஆண்டு மே மாதம் **16-**ஆம் தேதியன்று வங்கி ஊழியர் இயக்கத்தின் முன்னோடியும் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் அப்போதைய செயலாளருமான தோழர் **H L** பர்வானா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.



புதுப்பிக்கப்பட்ட சங்கத்தின் அலுவலகக் கட்டிடம் **55** ஆண்டுகளுக்குப் பிறகு, **16-05-2026** அன்று தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் **E** அருணாச்சலம் அவர்களின் முன்னிலையில், அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் **C H** வெங்கடாசலம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.



இந்நிகழ்ச்சியில் மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் மூத்த தலைவர்களும், நிர்வாகிகளும் கலந்துகொண்டனர். இந்திய வங்கித்துறை சந்திக்கும் சவால்கள் மற்றும் வங்கி ஊழியர் மேற்கொள்ள வேண்டிய எதிர்கால தொழிற்சங்கப் பணிகள் குறித்து விளக்கிடும் விதமாக சிறப்புக் கூட்டம் **16-05-2026** அன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இக்கூட்டத்தில் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் **C H** வெங்கடாசலம் அவர்களும், தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் **E** அருணாச்சலம் அவர்களும் பங்கேற்று சிறப்பித்தனர்.



அவர்கள் தங்களுடைய உரையில், 55 ஆண்டுகளுக்குப் பிறகு புதுப்பிக்கப்பட்டு, சீரமைக்கப்பட்ட சங்கத்தின் அலுவலகக் கட்டிடம் ஒட்டு மொத்த தொழிலாளர் வர்க்க இயக்கத்திற்கும் மிகவும் பயனுள்ளதாக அமையும் என்று புகழ்ந்துரைத்தனர். எந்தவொரு தொழிற்சங்கத்திற்கும் ஒற்றுமை என்பது அடிப்படைத் தேவை என்ற நோக்கத்தில் தொலைநோக்குப் பார்வை கொண்ட மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் ஸ்தாபகத் தலைவர்களின் சீரிய முயற்சியால் உருவான சங்கக் கட்டிடத்தைப் புதுப்பித்து, அனைத்து பகுதித் தொழிலாளரும் பயன்பெறும் வகையில் மாற்றியமைத்த மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் தற்போதைய பொறுப்பாளர்களின் செயல்பாடுகளை பாராட்டினர்.



இக்கூட்டத்தில் சேலம் மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் முன்னோடித் தலைவர்கள் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் தோழர் **C H** வெங்கடாசலம் அவர்களால் கௌரவிக்கப்பட்டனர். இக்கூட்டத்திலும் நம் சங்க உறுப்பினர்கள் பெருவாரியாகக் கலந்து கொண்டனர்.





